**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No.380/2023

**24.11.2025**

## P.W.1- இந்திரா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் மதுரையில் வசித்து வருகிறேன். தாவா சொத்தின் சர்வே எண்.177-2ஏ ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 99 சென்டு ஆகும். தாவா சொத்து கருமாத்தூா˙ கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை மங்குத்தாயம்மாளிடம் இருந்து கிரையம் பெற்றேன். எப்போது கிரையம் பெற்றேன் என்றால˙ தேதி ஞாபகமில்லை. சுமார் 30 வருடங்கள˙ இருக்கும். மேற்படி மங்குத்தாயம்மாள˙ பிரதிவாதி குருசாமியின் மனைவி என்றால˙ சரிதான். அவர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தான் நான் விவசாயம் செய்வதை இடைஞ்சல் செய்கிறார். சர்வே எண்.177-2ஏ யில் மொத்தம் 3 ஏக்கர் 53 சென்டு நிலம் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி சர்வே எண்ணில் பிரிக்கப்படாத 75 சென்டை நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். பிராதில் தாவா சொத்தின் நான்கு மால்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. பிராதில˙ சர்வே எண்.177-2ஏ1ல˙ கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து பரிகாரம் கேட்டுள்ளேன˙ என்றால் சரிதான். சர்வே எண்.177-2ஏ1ல˙ தனியாக உட்பிரிவு ஆகியிருந்தால், ஏன் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால˙ தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தனிப்பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்ன பரிகாரம˙ கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன˙ என்றால் தனிப்பட்டா கேட்டும், விவசாயம் செய்வதை தடுக்க கூடாது என கோரி வழக்கு தாக்கல˙ செய்துள்ளேன். வா.சா.ஆ.3 கூட்டுப்பட்டா என்றால˙ சரிதான். மேற்படி பட்டாவில் பிரதிவாதி பெயரும் கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் கண்ட பிரதிவாதியை தவிர மற்ற நபர்களை வழக்கில் தரப்பினரர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் ஏதாவது பிரச்சினை உள்ளதா என்றால் இந்த இடத்தகராறு தவிர வேறு பிரச்சினை இல்லை. பிரதிவாதி எனது பெயரை பட்டாவிலிருந்து நீக்கியது காழ்ப்புணர்ச்சி

என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பதிவுகள் அனைத்தும் சர்வே எண்.177-2ஏ என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5ல் கூட்டுப்பட்டாவில் எனது பெயருடன் சேர்த்து பிரதிவாதியின் பெயரும் நீக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி பெயரை பட்டாவிலிருந்து நீக்கியதால் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP.28465/2023 மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண்.177-2ஏ யில் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரண சொத்தான 3 ஏக்கர் 53 சென்டுக்கும், விருமாண்டி என்பவர் பிரதிவாதி மற்றும் மங்குத்தாயம்மாளை தரப்பினராக சேர்த்து அ.வ.280-2004 வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கு தள்ளுபடி ஆகி மேல்முறையீடு எண்.167-2007 நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் படிக்க தெரியாது. மேற்படி எதிர்வழக்குரையில் மேற்படி வழக்கை பிரதிவாதி குறிப்பிட்டுள்ளார், மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவம் செய்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கூட்டு பட்டாவை நீக்கியதை ஆட்சேபணை செய்து கொடுக்கப்பட்ட மனு என்றால் சரிதான். மேற்படி மனுவில் பிரதிவாதியால் எனது பெயர் நீக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பெயரையும், பிரதிவாதி பெயரையும் கூட்டுப்பட்டாவிலிருந்து நீக்கியது அ.வ.280-2004 வழக்கின் வாதியின் வாரிசுதாரர்கள் என்றால் தெரியாது. மேற்படி உண்மையான தரப்பினர்களை சேர்க்காமல் தவறுதலாக பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் பிரதிவாதி செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.24 18:25:38 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.